सत्यमेव जयते

भारत का राजपत्र

# The Gazette of India

இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्राकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, गुरुवार, जुलाई 7, 1994 / 1916 शक

New Delhi, Thursday, 7th July 1994

புது தில்லி, 1994 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 7ஆம் நாள், வியாழக்கிழமை

## Ministry of Law, Justice and Company Affairs

(Legislative Department)

New Delhi.

## சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்

(சட்டத்துறை)

புது தில்லி.

The translation in Tamil of the Specific Relief Act, 1963 (47 of 1963) is hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

குறித்தவகைத் தீருதவிச் சட்டம், 1963 (47/1963)இன் தமிழாக்கம் குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றது. அதிகார உறுதிபெற்ற வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன் பிரிவு 2இன் கூறு (அ)-வின் படி இதுவே தமிழில் அதிகார உறுதிபெற்ற வாசகமாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

# குறித்தவகைத் தீருதவிச் சட்டம், 1963

(சட்ட எண். 47/1963)

[டிசம்பர் 13, 1963]

குறித்தவகைத் தீருதவியின் சில வகைகள் தொடர்பான சட்டத்தைப் பொருள் வரையறை செய்வதற்கும், திருத்தம் செய்வதற்குமான ஒரு சட்டம்

இந்தியக் குடியரசின் பதினான்காம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டம் இயற்றப் படுவதாகுக :—

## பகுதி 1

## முன்னுரை

1. (1) இந்தச் சட்டம், குறித்தவகைத் தீருதவிச் சட்டம், 1963 என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது, ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியா முழுவதையும் அளாவிநிற்கும்.

(3) இது, மைய அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடும் தேதியன்று[1] செல்லாற்றல் பெறும்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,— பொருள் வரையறைகள்.

(அ) ''கடமைப்பொறுப்பு'' என்பது, சட்டத்தின் வாயிலாகச் செயலுறுத்தத்தக்க கடமை ஒவ்வொன்றையும் உள்ளடக்கும் ;

(ஆ) ''அறுதியாவணம்'' என்பது, எந்த முறையாவணத்தின் மூலம் அசைவியல் அல்லது நிலையியல் சொத்திலுள்ள உரித்தங்கள் அடுத்தடுத்துச் சென்று சேருவதற்கு அல்லது இறங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதோ அல்லது ஏற்பாடு செய்ய ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதோ அந்த முறையாவணம் (இந்திய உரிமை இறக்கச் சட்டம், 1925இல் பொருள்
39/1925 வரையறை செய்யப்பட்டுள்ள உயிலோ உயிலிணைப்போ அல்லாதது) என்று பொருள்படும் ;

(இ) ''பொறுப்புக்கட்டளை'' என்பது, இந்தியப் பொறுப்புக் கட்டளைகள் சட்டம், 1882இன் பிரிவு 3இல் உள்ள அதே பொருளைக்
2/1882 கொண்டிருக்கும் ; மற்றும் அது, அந்தச் சட்டத்தின் அத்தியாயம் IX இன பொருளின்படியான பொறுப்புக் கட்டளையின் தன்மையுள்ள கடமைப் பொறுப்பையும் உள்ளடக்கும் ;

(ஈ) ''பொறுப்புக்கட்டளையர்'' என்பது, பொறுப்புக்கட்டளையில் சொத்தினைக் கொண்டிருக்கும் ஆள் ஒவ்வொருவரையும் உள்ளடக்கும் ;

(உ) இதில் பயன்படுத்தப்பட்டு ஆனால், பொருள்வரையறை செய்
9/1872 யப்பட்டிராதவையும், இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872இல் பொருள் வரையறை செய்யப்பட்டிருப்பவையுமான பிற சொற்கள், சொற்றொடர்கள் ஆகியவை அனைத்தும் அந்தச் சட்டத்தில் அவற்றிற்கு முறையே குறித்தளிக்கப்பட்ட பொருள்களைக் கொண்டிருக்கும்.

3. இந்தச் சட்டத்தில் பிறவாறு வகைசெய்யப்பட்டிருந்தால் தவிர, இதிலுள்ள எதுவும்,— காப்புரைகள்.

(அ) ஆள் எவரையும், ஒப்பந்தம் எதன்படியும் அவர் கொண்டிருக்கும் குறித்தவகை நிறைவேற்றுகைக்கானதல்லாத பிற தீருதவிக்கான உரிமை எதையும் இழக்கச் செய்வதாக, அல்லது

---

1. 1,மார்ச், 1964: அறிவிக்கை எண். நிலை ஆணை 189, 13—1—1964 தேதியிடப்பட்ட இந்திய அரசிதழ், பகுதி II, பிரிவு 3(ii), பக்கம் 214 ஐப் பார்க்கவும்.

(ஆ) ஆவணங்கள் மீது இந்தியப் பதிவுச் சட்டம், 1908இன் செயற்பாட்டைப் பாதிப்பதாகக் கொள்ளப்படுதல் ஆகாது. 16/1908

தனிப்பட்டவருடைய குடியியல் உரிமைகளைச் செயற்படுத்துவதற்காக மட்டுமே குறித்தவகைத் திருதவி வழங்கப்படுதல் வேண்டும். ஆனால், தண்டனைச் சட்டங்களைச் செயற்படுத்துவதற்காக அன்று.

4. குறித்தவகைத் தீருதவி எதுவும், தனிப்பட்டவருடைய குடியியல் உரிமைகளைச் செயுற்படுத்தும் நோக்கத்திற்காக மட்டுமே வழங்கப்படக் கூடும்; ஆனால், ஒரு தண்டனைச் சட்டத்தைச் செயற்படுத்தும் நோக்கத்திற்காக அன்று.

## பகுதி II

## குறித்தவகைத் தீருதவி

### அத்தியாயம் I

### சொத்தின் உடைமையைத் திரும்பப்பெறுதல்

குறித்தவகை நிலையியல் சொத்தினைத் திரும்பப் பெறுதல்.

5. குறித்தவகை நிலையியல் சொத்தின் உடைமைக்கு உரிமைகொண்ட ஓர் ஆள் உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1908இல் வகைசெய்யப்பட்டுள்ள முறையில் அதனைத் திரும்பப்பெறலாம். 5/1908

நிலையியல் சொத்தின் உடைமையை இழக்கும்படி செய்யப்பட்ட ஆளால் தொடுக்கப்படும் உரிமை வழக்கு.

6. (1) உரிய சட்ட நடவடிக்கை மூலமாக அல்லாமல், பிறவாறு ஆள் எவரும், அவருடைய இசைவில்லாமல் நிலையியல் சொத்தின் உடைமையை இழக்கும்படி செய்யப்படுவாராயின், அவர் அல்லது அவர் மூலம் உரிமை கோரும் ஆள் எவரும், உரிமைவழக்கின் வழியாக, அத்தகைய உரிமைவழக்கில் கூறப்படலாகும் பிற உரிமைமூலம் எதுவும் இருந்த போதிலும், அந்தச் சொத்தின் உடைமையைத் திரும்பப்பெறலாம்.

(2) இந்தப் பிரிவின்படி உரிமைவழக்கு எதுவும்,—

(அ) உடைமையிழப்புத் தேதியிலிருந்து ஆறு திங்கள் கழிவுறுவதன் பின்பு, அல்லது

(ஆ) அரசாங்கத்திற்கு எதிராக

தொடுக்கப்படுதல் ஆகாது.

(3) இந்தப் பிரிவின்படி தொடுக்கப்பட்ட உரிமை வழக்கு எதிலும் பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது தீர்ப்பாணை எதற்கும் எதிராக மேல்முறையீடு எதுவும் செய்வதற்கு உற்றது ஆகாது; அத்தகைய ஆணை அல்லது தீர்ப்பாணை எதையும் மறுஆய்வு செய்ய அனுமதிக்கப்படுதலும் ஆகாது.

(4) இந்தப் பிரிவிலுள்ள எதுவும், ஆள் எவரும் அத்தகைய சொத்திற்கான தமது உரிமைமூலத்தை நிலைநாட்டுவதற்கும் அதன் உடைமையைத் திரும்பப் பெறுவதற்கும் வழக்கிடுவதைத் தடை செய்யாது.

5/1908 7. குறித்தவகை அசைவியல் சொத்தின் உடைமைக்கு உரிமைகொண்ட ஓர் ஆள், உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1908ஆல் வகை செய்யப்பட்ட முறையில் அதைத் திரும்பப்பெறலாம்.

குறித்தவகை அசைவியல் சொத்தினைச் திரும்பப் பெறுதல்.

விளக்கம் 1.—பொறுப்புக்கட்டளையர் ஒருவர், எந்த ஆளுக்கு அவர் பொறுப்புக் கட்டளையாராக இருக்கிறாரோ அந்த ஆள், பயனளி உரித்தம் பெற உரிமை கொண்டுள்ள அசைவியல் சொத்தின் உடைமையைப் பெறுவ தற்காக, இந்தப் பிரிவின்படி வழக்கிடலாம்.

விளக்கம் 2.—அசைவியல் சொத்தின் தற்கால உடைமைக்காகத் தனியுறு அல்லது தற்காலிக உரிமை, இந்தப் பிரிவின்படி ஓர் உரிமை வழக்குத் தொடருவதற்குப் போதுமான ஆதாரமாகும்.

8. தாம் உரிமையாளராயில்லாமல், அசைவியல் சொத்தாகவுள்ள ஒரு குறிப்பிட்ட பொருளின் உடைமையை அல்லது கட்டாளுகையைக் கொண்டிருக்கும் ஆள் எவரும், பின்வரும் நேர்வுகளில் எதிலும், அதன் உடனடி உடைமைக்கு உரிமை கொண்ட ஆளிடம் அதனை ஒப்புவிக்கும்படி குறிப்பிட்டுக் கட்டாயப்படுத்தப்படலாம்.—

உரிமையாளர் என்ற முறையில் அல்லாமல் உடைமையை வைத்திருக்கும் ஆள், உடனடி உடைமையைப் பெறுவதற்கு உரிமை கொண்ட ஆட்களிடம் ஒப்புவிப்பதற் குள்ள கடப்பாடு.

(அ) உரிமை கோரப்பட்ட பொருள், எதிர்வாதியால் வாதியின் முகவர் அல்லது பொறுப்புக்கட்டளையர் என்ற முறையில் வைத்திருக்கப்படும்போது;

(ஆ) உரிமை கோரப்பட்ட பொருளின் இழப்புக்காக, பணவகைச் சரியீடானது வாதிக்குப் போதிய தீருதவியை அளிக்க இயலாத போது;

(இ) அதன் இழப்பால் ஏற்பட்ட உள்ளபடியான சேதத்தைக் கண்டறிவது மிகவும் கடினமானதாக இருக்கும்போது;

(ஈ) உரிமை கோரப்பட்ட பொருளின் உடைமை வாதியிடமிருந்து சட்ட முரணாக உரிமைமாற்றம் செய்யப்பட்டிருக்கும்போது.

விளக்கம்.—இதற்கு மாறானது மெய்ப்பிக்கப்பட்டாலன்றியும், மெய்ப் பிக்கப்படும் வரையிலும், இந்தப் பிரிவின் கூறு (ஆ) அல்லது கூறு (இ)-யின் படி உரிமை கோரப்பட்ட அசைவியல் சொத்தாகவுள்ள பொருள் எதையும் பொறுத்து, நீதிமன்றம்—

(அ) உரிமை கோரப்பட்ட பொருளின் இழப்புக்காக, பணவகைச் சரியீடானது வாதிக்குப் போதிய தீருதவியை அளிக்க இயலாது என்று, அல்லது நேர்வுக்கேற்ப,

(ஆ) அதன் இழப்பால் ஏற்பட்ட உள்ளபடியான சேதத்தைக் கண் டறிவது மிகவும் கடினமானதாக இருக்கும் என்று

துணிபு கொள்ளும்.

## அத்தியாயம் II

### ஒப்பந்தங்களைக் குறித்தவகையில் நிறைவேற்றுதல்

9. இதில் பிறவாறு வகை செய்யப்பட்டிருந்தால் தவிர, ஓர் ஒப்பந் தத்தைப் பொறுத்து இந்த அத்தியாயத்தின்படி தீருதவி எதுவும் கோரப் பட்டிருக்குமிடத்து, எந்த ஆளுக்கு எதிராக அந்தத் தீருதவி கோரப்படு கிறதோ அந்த ஆள், ஒப்பந்தங்கள் தொடர்பான சட்டம் எதன்படியும், தமக்குக் கிடைக்கத்தக்க ஆதாரம் எதையும் எதிர்வாதமாகக் கொண்டு வாதிடலாம்.

ஒப்பந்தத்தின் அடிப்படை யிலுள்ள தீருத விக்கான உரிமை வழக்குகள் பொறுத்து எதிர் வாதங்கள்.

## குறித்த வகையில் செயலுறுக்கத் தக்க ஒப்பந்தங்கள்

குறித்த வகையில் ஒப்பந்தம் நிறைவேற்றப் படுதலைச் செயலுறுத்தத்தக்க நேர்வுகள்.

10. இந்த அத்தியாயத்தில் பிறவாறு வகை செய்யப்பட்டிந்தால் தவிர,—

(அ) செய்வதற்கு உடன்பட்ட செயலை, நிறைவேற்றாமையினால் ஏற்பட்ட உள்ளபடியான சேதத்தைக் கண்டறிவதற்குத் திட்ட முறை எதுவும் இல்லாதபோது, அல்லது

(ஆ) செய்வதற்கு உடன்பட்ட செயலை, அதனை நிறைவேற்றா மைக்குரிய பணவகைச் சரியீடு போதிய தீருதவியை அளிக்காத தாக இருக்கும்போது

நீதிமன்றத்தின் உளத்தேர்வின்படி ஒப்பந்தம எதனின் குறித்தவகை நிறைவேற்றமும் செயலுறுத்தப்படலாம்.

விளக்கம்.—மாறானது மெய்ப்பிக்கப்பட்டாலன்றியும், மெய்ப்பிக்கப் படும் வரையிலும், நீதிமன்றம்—

(i) நிலையியல் சொத்தினை உரிமைமாற்றம் செய்வதற்கான ஓர் ஒப்பந்தத்தின் மீறுகையானது, பணவகைச் சரியீட்டினால் போதியவாறு தீருதவி அளிக்கப்பட முடியாதது என்றும்,

(ii) அசைவியல் சொத்தினை உரிமை மாற்றம் செய்வதற்கான ஓர் ஒப்பந்தத்தின் மீறுகையானது, பின்வரும் நேர்வுகளில் தவிர, மற்றவற்றில் அவ்வாறு தீருதவி அளிக்கப்படக்கூடியது என்றும்

துணிபு கொள்ளும், அவையாவன:—

(அ) சொத்தானது, பொதுவகை வணிகப் பொருளாக இல்லாத தாகவோ வாதியைப் பொறுத்த மட்டில் தனியுறு மதிப்பு அல்லது உரித்தம் உடையதாகவோ சந்தையில் எளிதாகக் கிடைக்காத பொருளைக் கொண்டிருப்பதாகவோ இருக்குமிடத்து,

(ஆ) சொத்தானது, எதிர்வாதியால் வாதியின் முகவர் அல்லது பொறுப்புக்கட்டளையர் என்ற முறையில் வைத்திருக்கப் படுமிடத்து.

பொறுப்புக் கட்டளைகளுடன் தொடர்புள்ள ஒப்பந்தங்கள் குறித்தவகையில் நிறைவேற்றப் படுதலைச் செயலுறுத்தத் தக்க நேர்வுகள்.

11. (1) இந்தச் சட்டத்தில் பிறவாறு வகை செய்யப்பட்டிருந்தால் தவிர, செய்வதற்கு உடன்பட்ட செயல் ஒரு பொறுப்புக்கட்டளையின் முழு மையான அல்லது பகுதியான நிறைவேற்றுகையாக இருக்கும்போது, நீதி மன்றத்தின் உளத்தேர்வின்படி, ஒப்பந்தத்தின் குறித்தவகை நிறைவேற்றம் செயலுறுத்தப்படலாம்.

(2) பொறுப்புக்கட்டளையர் ஒருவரால் அவருடைய அதிகாரங் களுக்கு மிகையாக அல்லது பொறுப்புக்கட்டளையின் மீறுகையாகச் செய்யப் பட்ட ஒப்பந்தமானது, குறித்த வகையில் செயலுறுத்தப்பட இயலாது.

ஒப்பந்தத்தின் பகுதியைக் குறித்தவகையில் நிறைவேற்றுதல்.

12. (1) இந்தப் பிரிவில், இதன் பின்பு, பிறவாறு வகை செய்யப்பட் டிருந்தால் தவிர, நீதிமன்றம், ஒப்பந்தத்தின் பகுதியொன்றைக் குறித்த வகையில் நிறைவேற்றுமாறு பணித்தல் ஆகாது.

(2) ஒப்பந்தத்தின் தரப்பினர் ஒருவர், இதில் அவருடைய பகுதி முழுவதையும் நிறைவேற்ற இயலாமலிருந்து, ஆனால் நிறைவேற்றாமல் விட வேண்டிய பகுதியானது, மதிப்பைப் பொறுத்த வரையில் முழுவதிலும் ஒரு சிறு விகிதத்தை மட்டுமே கொண்டதாகவும், பணவகைச் சரியீட்டை ஏற் றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்குமிடத்து, இருவரில் ஒரு தரப்பினருடைய உரிமை வழக்கில் அந்த ஒப்பந்தத்தில் எந்த அளவு நிறைவேற்றப்படக் கூடுமோ அந்த அளவைக் குறித்த வகையில் நிறைவேற்றுமாறு நீதிமன்றம் பணிக்கலாம், மற்றும் குறைவதற்குப் பணவகைச் சரியீட்டிற்கான தீர்வம் வழங்கலாம்.

(3) ஒப்பந்தத்தின் தரப்பினர் ஒருவர், அதில் தம்முடைய பகுதி முழுவதையும் நிறைவேற்ற முடியாமலிருந்து, மற்றும், நிறைவேற்றாமல் விடவேண்டியதாக உள்ள பகுதியானது,—

(அ) பணவகைச் சரியீட்டை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த போதிலும், முழுமையில் ஒரு கணிசமான பகுதியாக, அல்லது

(ஆ) பணவகைச் சரியீட்டை ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லாமல் இருக்கிறவிடத்து, அவர், குறித்தவகையில் நிறைவேற்றுவதற்கான ஒரு தீர்ப்பாணையைப் பெறுவதற்கு உரிமை கொண்டவர் ஆகார்; ஆனால், நீதிமன்றம் பிற தரப்பினருடைய உரிமை வழக்கில், அந்தப் பிற தரப்பினர்.—

(i) கூறு (அ)-வின் கீழ் வரும் நேர்வில், ஒப்பந்தம் முழுமைக்குமாக உடன்பட்டுள்ள மறு பயனில் நிறைவேற்றாமல் விட வேண்டியதாகவுள்ள பகுதிக்கான மறு பயனைத் கழித்து வரும் தொகையைச் செலுத்துவாராயின் அல்லது செலுத்தியிருப்பாராயின், மற்றும் கூறு (ஆ)-வின்படி வரும் நேர்வில் ஒப்பந்தம் முழுமைக்குமான மறுபயனை, தொகை எதுவும் குறைக்காமல் [1] [செலுத்துவாராயின் அல்லது செலுத்தியிருப்பாராயின்], மற்றும்

(ii) இரண்டில் எந்தவொரு நேர்விலும் ஒப்பந்தத்தில் எஞ்சியிருக்கும் பகுதி நிறைவேற்றப்படுவதற்கான உரிமைக் கோரிக்கைகள் அனைத்தையும் மற்றும் குறைபாடு பொறுத்த அல்லது எதிர்வாதியின் தவறுகையால் தமக்கு ஏற்பட்டுள்ள இழப்பு அல்லது சேதம் பொறுத்துச் சரியீடு பெறுவதற்கான உரிமைகள் அனைத்தையும் விட்டுவிடுவாராயின்

தவறுகை செய்யும் தரப்பினரை, ஒப்பந்தத்தில் அவருடைய பங்கில் அவர் எந்த அளவினை நிறைவேற்ற முடியுமோ அந்த அளவினைக் குறித்தவகையில் நிறைவேற்றுமாறு பணிக்கலாம்.

(4) ஒப்பந்தத்தின் எந்த ஒரு பகுதி, அதை மட்டும் தனியாக எடுத்துக் கொண்டால் குறித்த வகையில் நிறைவேற்றப்பட முடியும் மற்றும் நிறைவேற்றப்படவும் வேண்டும் என்பதாக உள்ளதோ அந்தப் பகுதி குறித்த வகையில் நிறைவேற்றப்பட முடியாததாக அல்லது நிறைவேற்றப்படக் கூடாததாகவுள்ள அதே ஒப்பந்தத்தின் மற்றொரு பகுதியிலிருந்து தனிப்பட்டதாகவும் தனித்து நிற்பதாகவும் இருக்கும்போது, நீதிமன்றம் முக்கியப் பகுதியைக் குறித்த வகையில் நிறைவேற்றுமாறு பணிக்கலாம்.

விளக்கம்.—இந்தப் பிரிவின் நோக்கங்களைப் பொறுத்தவரை, ஒப்பந்தம் செய்யப்பட்ட தேதியில் இருந்துவந்த ஒப்பந்த நுதல்பொருளின் ஒரு பகுதி ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய சமயத்தில் இல்லாது போயிருக்குமாயின், ஒப்பந்தத்தின் ஒரு தரப்பினர் அந்த ஒப்பந்தத்தில் தம்முடைய பகுதி முழுவதையும் நிறைவேற்ற இயலாதவர் எனக் கொள்ளப்படுவார்.

உரிமை மூலம் கொண்டிராத அல்லது குறையுடைய உரிமை மூலம் கொண்டிருக்கிற ஆளுக்கு எதிராக வாங்குநருக்குள்ள அல்லது குத்தகை எடுப்பவருக்குள்ள உரிமைகள்.

13. (1) ஓர் ஆள், உரிமைமூலம் கொண்டிராமல் அல்லது குறையுடையதோர் உரிமைமூலத்தை மட்டுமே கொண்டிருந்து, குறித்த சில நிலையியல் சொத்துக்களை விற்க அல்லது குத்தகைக்கு விட ஒப்பந்தம் செய்து கொள்ளுமிடத்து, வாங்குநர் அல்லது குத்தகை எடுப்பவர் (இந்த அத்தியாயத்தின் பிற வகையங்களுக்கு உட்பட்டு) பின்வரும் உரிமைகளைக் கொண்டிருப்பார், அவையாவன:—

(அ) விற்குநர் அல்லது குத்தகை விடுபவர் ஒப்பந்தத்திற்குப் பிறகு அந்தச் சொத்தில் உரித்தம் எதையும் அடைவாராயின், வாங்குநர் அல்லது குத்தகை எடுப்பவர் அத்தகைய உரித்தத்தைக் கொண்டு அந்த ஒப்பந்தத்தைச் சரி செய்யும்படி அவரைக் கட்டாயப்படுத்தலாம்;

(ஆ) உரிமை மூலத்தைச் செல்லுநிலையதாக்குவதற்குப் பிற ஆட்களின் ஒருங்கிசைவு தேவையாயிருந்து, அந்த ஆட்கள், விற்குநர் அல்லது குத்தகை விடுபவரது வேண்டுகோளின் மீது ஒருங்கிசையக் கட்டுப்பட்டவர்களாக இருக்குமிடத்து, அவரை, வாங்குநர் அல்லது குத்தகை எடுப்பவர் அத்தகைய ஒருங்கிசைவினை முயன்று பெறும்படி கட்டாயப்படுத்தலாம்; மேலும் அந்த உரிமைமூலத்தைச் செல்லுநிலையதாக்குவதற்குப் பிற ஆட்கள் உரிமைமாற்றம் செய்து தருவது தேவையாயிருந்து அந்த ஆட்கள், விற்குநர் அல்லது குத்தகை விடுபவரது வேண்டுகோளின்மீது உரிமை மாற்றம் செய்வதற்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்கும் போது, அவரை, வாங்குநர் அல்லது குத்தகை எடுப்பவர் அத்தகைய உரிமை மாற்றத்தை முயன்று பெறும்படியாகக் கட்டாயப்படுத்தலாம்;

---

1. நீக்கறவு செய்தல் மற்றும் திருத்துதல் சட்டம், 1964 இன் (52/1964) பிரிவு 3 மற்றும் இணைப்புப் பட்டியல் II ஆல் புகுத்தப்பட்டது.

(இ) வில்லங்கமில்லாத சொத்தினை விற்பதாக விற்குநர் சொல்லிக் கொண்டிருந்து, ஆனால், கொள்விலைத் தொகைக்கு மிகாத ஒரு தொகைக்கு அந்தச் சொத்து அடைமானம் வைக்கப்பட்டிருந்து, உண்மையில் அந்த விற்குநர் அதை மீட்கும் உரிமையை மட்டுமே கொண்டிருக்குமிடத்து, அவரை வாங்குநர், அந்த அடமானத்தை மீட்கும்படியும், செல்லு நிலையுடைய விடுவிப்புப் பெறும்படியும் மேலும் தேவைப்படுகிற விடத்து, அடைமானம் பெற்றவரிடமிருந்து உரிமை மாற்றத்தைக் கூடப் பெறும்படியும் கட்டாயப்படுத்தலாம்;

(ஈ) விற்குநர் அல்லது குத்தகை விடுபவர், ஒப்பந்தம் குறித்த வகையில் நிறைவேற்றப்படுவதற்காக வழக்கிட்டிருந்து, அவருக்கு உரிமை மூலம் இல்லை அல்லது அவர் குறையுடைய உரிமை மூலம் கொண்டவர் என்ற காரணத்தின் மீது உரிமைவழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டிருக்குமிடத்து, எதிர்வாதி தாம் செய்த வைப்பீடு, ஏதேனுமிருப்பின், அதனை அதற்குரிய வட்டியோடு திரும்பப் பெறுவதற்கும், அந்த உரிமை வழக்கிற்கான தம்முடைய செலவுத் தொகைகளுக்கும், அந்த ஒப்பந்தத்தின் நுதல் பொருளாகவுள்ள சொத்தில், விற்குநருக்கு அல்லது குத்தகை விடுபவருக்கு உரித்தம் ஏதேனுமிருப்பின், அதன் மீது அத்தகைய வைப்பீடு, வட்டி, செலவுத் தொகைகள் ஆகியவற் றுக்காக, பற்றுரிமைக்கும் உரிமை உடையவராவார்.

(2) உட்பிரிவு (1) இன் வகையங்கள், எந்த அளவுக்குக் கூடுமோ அந்த அளவுக்கு, அசைவியல் சொத்தினை விற்பதற்கான அல்லது வாடகைக்கு விடுவதற்கான ஒப்பந்தங்களுக்கும் கூடப் பொருந்தும்.

## குறித்த வகையில் செயலுறுத்த இயலாத ஒப்பந்தங்கள்

குறித்த வகையில் செயலுறுத் தப்படாத ஒப்பந்தங்கள்.

14. (1) பின்வரும் ஒப்பந்தங்கள், குறித்த வகையில் செயலுறுத்தப் பட இயலாதவை, அவையாவன.—

(அ) எந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றாமைக்குப் பண வகைச் சரி யீடு போதிய தீருதவியாக இருக்குமோ அந்த ஒப்பந்தம்;

(ஆ) முக்கியமான வரையுரைகள் குறித்த வகையில் நிறைவேற்றப் படுவதை நீதிமன்றம் செயலுறுத்த இயலாதபடி நுட்பமான அல்லது எண்ணற்ற விவரங்களைக் கொண்டிருக்கிற, அல்லது தரப்பினர்களின் சொந்தத் தகுதிகள் அல்லது விருப்பத்தைச் சார்ந்திருக்கிற, அல்லது பிறவாறு அதன் தன்மை காரணமாக அப்படி அமைந்திருக்கிற ஓர் ஒப்பந்தம்;

(இ) தன்மை காரணமாக, முடிவுறச் செய்யத் தக்கதாகவுள்ள ஒப்பந்தம்;

(ஈ) எந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுதலானது, நீதிமன்றம் மேற்பார்வையிட முடியாதபடி தொடர்ந்து கடமை ஆற்றுதலை உள்ளடக்கியுள்ளதோ அந்த ஒப்பந்தம்;

(2) பொதுவர் தீர்ப்புச் சட்டம், 1940 ஆல் வகை செய்யப்பட் டுள்ளவாறு தவிர, தற்போதைய அல்லது எதிர்காலக் கருத்து வேறுபாடு களைப் பொதுவர் தீர்ப்புக்குச் சாட்டுவதற்குரிய ஒப்பந்தம் எதுவும், குறித்த வகையில் செயலுறுத்தப்படுதல் ஆகாது; ஆனால் அத்தகைய மேற்சொன்ன சட்டத்தின் வகையங்கள் பொருந்துகின்ற பொதுவர் தீர்ப்பு உடன்பாடு அல்லாத பிற ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டிருந்து அதனை நிறைவேற்ற மறுக்கிற ஆள் எவரும், அவர் சாட்டுகை செய்வதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிற பொருள் எதையும் பொறுத்து வழக்கிடுவாராயின், அத்தகைய ஒப்பந்தம் இருப்பதானது உரிமை வழக்கைத் தடை செய்வதாகும். 10/1940

(3) உட்பிரிவு (1) இன் கூறு (அ) அல்லது கூறு (இ) அல்லது கூறு (ஈ)-வில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், குறித்தவகை நிறைவேற்றுகையைப் பின்வரும் நேர்வுகளில் நீதிமன்றம் செயலுறுத்தலாம்:—

(அ) (i) எந்தக் கடனை, கடன் வாங்குநர் உடனே திருப்பித் தருவதற்கு விருப்பமில்லாதிருக்கிறாரோ அந்தக் கடன் எதையும் திருப்பிச் செலுத்துதலை உறுதிப்படுத்துவதற்காக அடைமானம் எழுதிக் கொடுப்பதாகவுள்ள அல்லது பிற பிணையம் எதனையும் அளிப்பதாகவுள்ள ஒப்பந்தத்தைச் செயலுறுத்துவதற்கான உரிமைவழக்காக இருக்குமிடத்து:

வரம்புரையாக: கடன் தொகையில் ஒரு பகுதி மட்டுமே கொடுக்கப்பட்டிருந்து, அந்த ஒப்பந்தத்தின் வரையுரைகளின்படி கடன் தொகையின் மீதப் பகுதியைக் கொடுப்பதற்குக் கடன்தருநர் விருப்பமுடையவராய் இருத்தல் வேண்டும், அல்லது

(ii) ஒரு நிறுமத்தின் கடனீட்டு ஆவணங்கள் எவற்றையும் வாங்கிக்கொண்டு அவற்றுக்குரிய பணத்தைச் செலுத்துவதற்காகவுள்ள ஒப்பந்தத்தைச் செயலுறுத்துவதற்கான உரிமைவழக்காக இருக்குமிடத்து ; அல்லது

(ஆ) (i) தரப்பினர்கள் கூட்டாண்மைத்தொழிலை நடத்தத் தொடங்கியிருந்து, முறைப்படியான கூட்டாண்மை ஆவணத்தை எழுதிக்கொள்வதற்கான உரிமைவழக்காக இருக்குமிடத்து, அல்லது

(ii) ஒரு நிறுவகத்தைச் சேர்ந்த ஒரு கூட்டாளியின் பங்கை விலைக்கு வாங்குவதற்கான உரிமைவழக்காக இருக்குமிடத்து ;

(இ) கட்டடம் எதையும் கட்டுவதற்காக அல்லது நிலத்தின் மேல் பிற வேலை எதையும் செய்வதற்காகவுள்ள ஓர் ஒப்பந்தத்தைச் செயலுறுத்துவதற்கான உரிமைவழக்காக இருக்குமிடத்து :

வரம்புரையாக : பின்வரும் வரைக்கட்டுகள் நிறைவேற்றப்பட்டிருத்தல் வேண்டும், அவையாவன :—

(i) அந்தக் கட்டடம் அல்லது பிற வேலையின் சரியான தன்மையைத் தீர்மானிப்பதற்கு நீதிமன்றத்தை இயல்விக்கும் வகையில் போதிய அளவு துல்லியமான வரையுரைகளால் அந்தக் கட்டடம் அல்லது வேலை பற்றி அந்த ஒப்பந்தத்தில் விவரிக்கப்பட்டிருத்தல் :

(ii) அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் வாதிக்குப் பெருமளவு பயனலிருத்தலும் அந்தப் பயனலத்தின் தன்மை அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றாமைக்காகப் பணவகைச் சரியீடு போதிய தீருதவி ஆகாதிருத்தல் ; மற்றும்

(iii) கட்டடம் கட்டப்படவேண்டிய அல்லது பிற வேலை செய்யப்பட வேண்டிய நிலம் முழுவதன் அல்லது அதன் ஏதேனும் பகுதியின் உடைமையை எதிர்வாதி அந்த ஒப்பந்தத்தின்படி அடைந்திருத்தல்.

## ஒப்பந்தங்கள் எந்த ஆட்களுக்காக அல்லது எந்த ஆட்களுக்கு எதிராகக் குறித்தவகையில் செயலுறுத்தப்படலாம்

15. இந்த அத்தியாயத்தில் பிறவாறு வகை செய்யப்பட்டிருந்தால் தவிர, ஓர் ஒப்பந்தம் குறித்தவகையில் நிறைவேற்றப்படுதலை— *குறித்த வகையான நிறைவேற்றுகையை யார் பெறலாம்.*

(அ) அதன் தரப்பினர் எவரும் கோரிப் பெறலாம் ;

(ஆ) அதன் தரப்பினர் எவருடைய உரித்தத்துக்குமான சார்பாற்றுநர் அல்லது முதல்வர் கோரிப் பெறலாம் :

வரம்புரையாக : அத்தகைய தரப்பினரின் கல்வியறிவு, திறமை, செல்லும்நிலை (Solvancy) அல்லது தனிப்பட்ட பண்பு எதுவும் அந்த ஒப்பந்தத்தில் ஒரு முக்கியமான கூறாக இருக்குமிடத்து அல்லது அந்த ஒப்பந்தம், அவரது உரித்தம் குறித்தளிக்கப்படுதலாகாது என்று வகை செய்துள்ளவிடத்து, அத்தகைய தரப்பினர் அந்த ஒப்பந்தத்தில் தன் பகுதியை ஏற்கெனவே நிறைவேற்றியிருந்தாலன்றி, அல்லது அந்தப் பகுதி, உரித்தமுடைய அவருடைய சார்பாற்றுநரால் அல்லது அவருடைய முதல்வரால் நிறைவேற்றப்பட்டதைப் பிற தரப்பினர் ஏற்றுக்கொண்டிருந்தாலன்றி, அந்த ஒப்பந்தம் குறித்தவகையில் நிறைவேற்றப்படுதலுக்கு உரித்தமுடைய அவருடைய சார்பாற்றுநர் அல்லது அவருடைய முதல்வர் உரிமைகொண்டவர் ஆகார் ;

(இ) ஒப்பந்தமானது, திருமணத்தினால் அடைவதற்கான அறுதியாவணமாக இருக்குமிடத்து, அல்லது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்களிடையே இருந்த ஐயப்பாடான உரிமைகளைப் பொறுத்த ஓர் இணக்கத் தீர்வாக இருக்குமிடத்து, அதன்படிப் பயன் பெறுவதற்கு உரிமை கொண்ட ஆள் எவரும் கோரிப் பெறலாம் ;

(ஈ) ஒப்பந்தம், ஆயுள் குத்தகையாளர் ஒருவரால் அதிகாரத்தை உரியமுறையில் செலுத்திச் செய்து கொள்ளப்பட்டிருக்குமிடத்து, எஞ்சுரிமையாளர் கோரிப்பெறலாம் ;

(உ) உடன்பாடானது, உடைமையிலுள்ள மீள் உரிமையாளர் ஒரு வருடைய உரிமைமூலம் முன்னவருடன் செய்துகொள்ளப்பட்ட முத்திரை ஒப்பந்தமாக இருந்து, அந்த மீள் உரிமையாளர் அத்தகைய முத்திரை ஒப்பந்தத்தின் நன்மையைப் பெறுவதற்கு உரிமை கொண்டவராகவும் இருக்குமிடத்து, உடைமையிலுள்ள அந்த மீள் உரிமையாளர் கோரிப்பெறலாம் ;

(ஊ) உடன்பாடானது, அத்தகைய முத்திரை ஒப்பந்தமாக இருந்து, மீள் உரிமையாளர் அதிலிருந்து நன்மை பெறுவதற்கு உரிமை கொண்டவராகவும் அது மீறப்படுவது காரணமாக அவர் குறிப்பிடத்தக்க கேடு அடையக்கூடும் என்பதாகவும் இருக்குமிடத்து, எஞ்சுரிமைக்குரிய மீள் உரிமையாளர் கோரிப் பெறலாம் ;

(எ) ஒரு நிறுமம் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டிருந்து, பின்னர் அது பிறிதொரு நிறுமத்துடன் ஒருங்கிணைந்து விடும் போது, ஒருங்கிணைப்பிலிருந்து தோன்றும் புதிய நிறுமம் கோரிப் பெறலாம் ;

(ஏ) ஒரு நிறுமத்தின் அமைப்பாளர்கள், அது கூட்டுருமமாகப் பதிவு செய்யப்படுவதற்கு முன்பு அந்த நிறுமத்தின் நோக்கங் களுக்காக ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டிருந்து, கூட்டுரும மாகப் பதிவு செய்தல் தொடர்பான வரையுரைகளால் அத் தகைய ஒப்பந்தம் உறுதிப்படுத்தப்படும்போது அந்த நிறுமம் கோரிப்பெறலாம் :

வரம்புரையாக : அந்த ஒப்பந்தத்தை அந்த நிறுமம் ஏற்றுக் கொண் டிருந்தாலும் அத்தகைய ஏற்பை ஒப்பந்தத்தின் மற்றைய தரப்பினருக்குத் தெரிவித்தலும் வேண்டும்.

**தீருதவி அளிப்பதற்குத் தனிப்பட்ட ஆள் பொறுத்த தடைகள்.**

**16.** ஓர் ஒப்பந்தம் குறித்தவகையில் நிறைவேற்றப்படுதலானது,—

(அ) ஒப்பந்த மீறுகைக்காகச் சரியீடு பெறுவதற்கு உரிமைகொண்ட வராக இல்லாத ஓர் ஆள், அல்லது

(ஆ) தம் பங்காக நிறைவேற்ற வேண்டியது எஞ்சியுள்ள ஒப்பந் தத்தை நிறைவேற்ற இயலாதவராயிருக்கிற அல்லது அந்த ஒப்பந்தத்தின் மிக முக்கியமான வரையுரை எதையும் மீறுகிற அல்லது அந்த ஒப்பந்தம் பொறுத்து மோசடியாகச் செயலுறு கிற அல்லது அந்த ஒப்பந்தத்தால் ஏற்படுத்தக் கருதப்பட்ட உறவுக்கு மாறாகவோ அதனை அழிக்கும் வகையிலோ வேண்டுமென்றே செயலுறுகிற ஆள், அல்லது

(இ) எதிர்வாதியால் நிறைவேற்றுகை தடை செய்யப்பட்டிருக்கிற அல்லது வேண்டாமென விட்டுவிடப்பட்டிருக்கிற வரையுரை கள் அல்லாத பிற தம்மால் நிறைவேற்றப்பட வேண்டிய ஒப்பந்தத்தின் மிக முக்கியமான வரையுரைகளைத் தாம் நிறைவேற்றிவிட்டதாக அல்லது நிறைவேற்றுவதற்கு ஆயத்த மாகவும் விருப்பத்துடனும் எப்போதும் இருந்து வருவதாக உறுதி கூறி மெய்ப்பிக்கத் தவறுகிற ஆளுக்குச் சார்பாகச் செயலுறுத்தப்பட முடியாது.

விளக்கம்.—கூறு (இ)-யின் நோக்கங்களைப் பொறுத்தவரை,—

(i) ஓர் ஒப்பந்தம் பணச் செலுத்தத்தை உள்ளடக்கியுள்ள விடத்து, நீதிமன்றத்தால் செலுத்தும்படி பணிக்கப்படும் போது தவிர, பணம் எதனையும் வாதி எதிர்வாதிக்கு உள்ளபடியே கொடுக்க முற்படுதலோ நீதிமன்றத்தில் வைப் பீடு செய்தலோ தேவையாகாது ;

(ii) ஒப்பந்தத்தின் உண்மையான பொருள்கோளுக்கு இணங்க, அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றியதாக அல்லது அதை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமாகவும் விருப்பத்துடனும் இருந்த தாக வாதி உறுதியாகக் கூறுதல் வேண்டும்.

17. (1) நிலையியல் சொத்து எதையும் விற்பதற்கான அல்லது குத்தகைக்கு விடுவதற்கான ஓர் ஒப்பந்தமானது,—

சொத்தினை விற்பதற்காண அல்லது குத்தகைக்கு விடுவதற்கான ஒப்பந்தம் உரிமைமூலம் இல்லாதவரால் குறித்த வகையில் செயலுறுத்தத் தக்கதன்று.

(அ) உரிமைமூலம் எதுவும் தமக்கு அந்தச் சொத்தில் இல்லை என்பதைத் தாம் அறிந்திருந்தும், அந்தச் சொத்தினை விற்பதாக அல்லது குத்தகைக்கு விடுவதாக ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிற,

(ஆ) சொத்துக்குத் தாம் சரியான உரிமைமூலத்தைக் கொண்டிருப்பதாக நம்பி, அந்த ஒப்பந்தத்தைச் செய்துகொண்டிருந்த போதிலும், தரப்பினர்களால் அல்லது நீதிமன்றத்தால் அந்த விற்பனையை அல்லது குத்தகைக்கு விடுவதை நிறைவு செய்து முடிப்பதற்காகக் குறிக்கப்பட்ட காலத்தில், தகுமான ஐயத்துக்கு இடமில்லாத உரிமைமூலத்தை வாங்குநருக்கு அல்லது குத்தகை எடுப்பவருக்குக் கொடுக்க முடியாதிருக்கிற,

விற்குநர் அல்லது குத்தகைவிடுபவருக்குச் சார்பாகக் குறித்த வகையில் செயலுறுத்தப்பட இயலாது,

(2) உட்பிரிவு (1)இன் வகையங்கள், எந்த அளவுக்குக் கூடுமோ அந்த அளவுக்கு, அசைவியல் சொத்தினை விற்பதற்கான அல்லது வாடகைக்கு விடுவதற்கான ஒப்பந்தங்களுக்கும்கூடப் பொருந்தும்.

18. எழுத்து வடிவிலுள்ள ஓர் ஒப்பந்தம் குறித்தவகையில் நிறைவேற்றப்படவேண்டுமென்று வாதி கோரியிருந்து, அது மாறுதலோடு இருக்க வேண்டும் என்ற வாசகத்தை எதிர்வாதி எடுத்துரைக்குமிடத்து, வாதி பின்வரும் நேர்வுகளில் அவ்வாறு எடுத்துரைக்கப்பட்ட மாறுதலுடனின்றிக் கோரிய நிறைவேற்றத்தைப் பெறமுடியாது, அவையாவன :—

மாறுதல் செய்தாலன்றி செயலுறுத்த இயலாதிருத்தல்.

(அ) எழுத்துவடிவிலான எந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்படவேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறதோ அந்த ஒப்பந்தமானது, மோசடி, பொருண்மைத் தவறு அல்லது திரித்துக்கூறுகை காரணமாக அதன் வரையுரைகள் அல்லது செல்திறம் பொறுத்தவரையில் தரப்பினர்கள் உடன்பட்டவற்றிற்கு வேறுபட்டு அல்லது தரப்பினர்களுக்கிடையே உடன்பாடு ஏற்பட்ட எந்த வரையுரைகளின் அடிப்படையின்மீது எதிர்வாதி ஒப்பந்தம் செய்துகொண்டாரோ அந்த வரையுரைகள் அனைத்தையும் கொண்டிராமல் இருக்குமிடத்து,

(ஆ) எந்த ஒரு குறிப்பிட்ட சட்ட விளைவை உண்டாக்க வேண்டுமென்பதாகத் தரப்பினர்களின் நோக்கம் இருந்ததோ அந்த விளைவை ஒப்பந்தம் வனையப்பட்ட முறையானது உண்டாக்குவதாகக் கண்டறிய முடியாதவிடத்து,

(இ) ஒப்பந்தத்தைச் செய்துகொண்ட பிறகு, தரப்பினர்கள் அதன் வரையுரைகளை மாற்றியிருக்கிறவிடத்து.

19. இந்த அத்தியாயத்தில் பிறவாறு வகை செய்யப்பட்டிருந்தால் தவிர ஓர் ஒப்பந்தம் குறித்தவகையில் நிறைவேற்றப்படுதலானது,—

தரப்பினர்களுக்கு எதிராகவும் அவர்கள் வழியாகப் பிந்திய உரிமை மூலம் காரணமாக உரிமை கோரும் ஆட்களுக்கு எதிராகவும் நிருதவி.

(அ) அதன் தரப்பினர் இருவரில் எவருக்கும் எதிராகச் செயலுறுத்தப்படலாம் ;

(ஆ) நல்லெண்ணத்துடன் பணம் செலுத்தியுள்ளவரும் முதல் நிலை ஒப்பந்தம் பற்றிய அறிவிப்பைப் பெற்றிராதவருமான பெறு மானத்திற்காக உரிமைமாற்றம் பெறுநர், தவிர, ஒப்பந்தத் திற்குப் பின்னர் ஏற்பட்ட உரிமை மூலம் காரணமாக அவர் வழியாக உரிமை கோருகிற பிற ஆள் எவருக்கும் எதிராகச் செயலுறுத்தப்படலாம்;

(இ) எந்த ஓர் உரிமை மூலம் ஒப்பந்தத்துக்கு முந்தியதாகவும், வாதிக்குத் தெரிந்ததாகவும் இருந்தபோதிலும், எதிர்வாதியான விலக்களிக்கப்பட்டிருக்கக்கூடுமோ அந்த உரிமைமூலத்தின் வழி யாக உரிமை கோருகிற ஆள் எவருக்கும் எதிராகச் செயலுறுத்தப் படலாம் ;

(ஈ) ஒரு நிறுமம் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டிருந்து, பின்னர், அது பிறிதொரு நிறுமத்துடன் ஒருங்கிணைந்து விடும்போது, ஒருங்கிணைப்பிலிருந்து தோன்றும் புதிய நிறுமத்திற்கு எதிராகச் செயலுறுத்தப்படலாம் ;

(உ) ஒரு நிறுமத்தின் அமைப்பாளர்கள், அது கூட்டுருமமாகப் பதிவு செய்யப்படுவதற்கு முன்பு அந்த நிறுமத்தின் நோக்கங்களுக்காக ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டிருந்து, கூட்டுருமமாகப் பதிவுசெய்தல் தொடர்பான வரையுரைகளால் அத்தகைய ஒப்பந்தம் உறுதிப்படுத்தப்படும் போது, அந்த நிறுமத்திற்கு எதிராகச் செயலுறுத்தப்படலாம் :

வரம்புரையாக : அந்த ஒப்பந்தத்தை அந்த நிறுமம் ஏற்றுக் கொண் டிருந்தாலும் அத்தகைய ஏற்பை ஒப்பந்தத்தின் மற்றைய தரப்பினருக்குத் தெரி வித்தலும் வேண்டும்.

## நீதிமன்றத்தின் உளத்தேர்வும் அதிகாரங்களும்

**குறித்த வகையில் நிறைவேற்று மாறு தீர்ப் பாணை வழங்குதலில் உளத்தேர்வு.**

20. (1) குறித்தவகையில் நிறைவேற்றுமாறு தீர்ப்பாணை வழங்குவதற் கான அதிகாரவரம்பு உளத்தேர்வின்பாற்பட்டது, அத்தகைய தீருதவி வழங்குதல் சட்டப்படியானது என்ற காரணத்தால் மட்டுமே அவ்வாறு செய்ய நீதிமன்றம் கட்டுப்பட்டதுமன்று; ஆனால் நீதிமன்றத்தில் உளத் தேர்வானது, மனப்போக்கின் படியானதன்று, மாறாக அது சீரானதாகவும் தகுமானதாகவும் நீதிமுறை நெறி களின் வழிப்படுவதாகவும், மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் திருத்தப்படக்கூடிய தாகவும் இருக்க வேண்டும்.

(2) குறித்தவகையில் நிறைவேற்றுமாறு தீர்ப்பாணை வழங்காம லிருப்பதற்கு உளத்தேர்வை நீதிமன்றம் முறையாகச் செலுத்தலாகும் நேர்வுகள் பின்வருபவை :—

(அ) ஒப்பந்தம் தவிர்தகுநிலையதாக இல்லாதிருப்பினும், எதிர் வாதிக்கு எதிராக, வாதிக்கு, நேரியதல்லாத நன்மையளிக்கும் வகையில் ஒப்பந்தத்தின் வரையுறைகளோ ஒப்பந்தம் செய்து கொள்ளும் காலத்தில் தரப்பினர்களின் நடத்தையோ ஒப்பந்தம் செய்துகொள்ளும் போதிருந்த பிற சூழ்நிலைகளோ இருக்கு மிடத்து ;

(ஆ) ஒப்பந்தத்தை நிறைவேற்றுதல் எதிர்வாதியை அவர் எதிர்பார்த்திராத ஏதாவது இடர்ப்பாட்டுக்கு உள்ளாக்குவதாயும், ஆனால், அதை நிறைவேற்றாது விடுவது வாதியை அத்தகைய இடர்ப்பாட்டுக்கு உள்ளாக்காததாயும் இருக்குமிடத்து;

(இ) ஒப்பந்தத்தைத் தவிர்க்கத்தக்கதாக ஆக்காவிட்டாலும், அது குறித்தவகை நிறைவேற்றச் செயலுறுத்தத்தை நேர்மை நெறியற்றதாக ஆக்கும் சூழ்நிலைகளில் எதிர்வாதி ஒப்பந்தம் செய்துகொண்டிருக்குமிடத்து.

விளக்கம் 1.—மறுபயன் போதியதாக இல்லை என்று மட்டுமே, அல்லது அந்த ஒப்பந்தம் எதிர்வாதிக்குச் சுமை ஏற்படுத்துவதாக இருக்கிறது அல்லது அதன் தன்மையே சிந்திக்காமல் செய்யப்பட்டதாயிருக்கிறது என்ற உண்மை யால் மட்டுமே கூறு (அ)-வின் பொருளின்படி ஒரு நேரியதல்லாத நன்மையாக அல்லது கூறு (ஆ)-வின் பொருளின்படி இடர்ப்பாடாக அமைவதாகக் கொள்ளப் படுதல் ஆகாது.

விளக்கம் 2.—ஓர் ஒப்பந்தத்தை நிறைவேற்றுதலானது கூறு (ஆ)-வின் பொருளின்படி எதிர்வாதியை இடர்ப்பாட்டிற்கு உள்ளாக்கக்கூடுமா என்ற வினா, அந்த இடர்ப்பாடு, ஒப்பந்தத்திற்குப் பின்னர் செய்யப்பட்ட வாதியின் செயல் எதனாலும் விளைந்ததாக இருக்கும் நேர்வுகளில் தவிர, ஒப்பந்தக் காலத்தில் இருந்த சூழ்நிலைகளைப் பொறுத்துத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) குறித்தவகையில் நிறைவேற்றப்படக்கூடிய ஓர் ஒப்பந்தத்தின் விளைவாக வாதி கணிசமான அளவில் செயல்களைச் செய்திருக்கிற அல்லது இழப்புகளுக்கு உள்ளாகியிருக்கிற நேர்வு எதிலும், குறித்தவகையில் நிறை வேற்றுவதற்கான தீர்ப்பாணை வழங்குவதற்கு நீதிமன்றம் உளத்தேர்வை முறையாகச் செலுத்தலாம்.

(4) நீதிமன்றம், ஒப்பந்தமானது பிற தரப்பினரின் வேண்டுகோளின் பேரில் செயலுறுத்தத்தக்கதன்று என்ற காரணத்தால் மட்டுமே ஓர் ஒப்பந்தம் குறித்தவகையில் நிறைவேற்றப்படுதலைத் தரப்பினர் எவருக்கும் மறுத்தல் ஆகாது.

குறித்த சில நேர்வுகளில் சரியீட்டிற்குரிய தீர்வம் அளிப்பதற்கான அதிகாரம்.

21. (1) ஓர் ஒப்பந்தத்தின் குறித்தவகை நிறைவேற்றத்திற்கான உரிமை வழக்கில், அத்தகைய நிறைவேற்றுகைக்குக் கூடுதலாகவோ அதற்கு மாற்றாகவோ வாதி, அந்த ஒப்பந்தத்தின் மீறுகைக்கான சரியீட்டையும்கூட கோரலாம்.

(2) அத்தகைய உரிமைவழக்கு எதிலும், குறித்தவகை நிறைவேற்றத் திற்குத் தீர்ப்பாணை வழங்கப்படுதல் கூடாது என்றும், ஆயினும் தரப்பினர் களுக்கிடையே ஓர் ஒப்பந்தம் இருக்கிறது என்றும் அது எதிர்வாதியால் மீறப்பட்டிருக்கிறது என்றும், அந்த மீறுகைக்காக வாதி சரியீடு பெறுவதற்கு உரிமைகொண்டவர் என்றும், நீதிமன்றம் முடிவுசெய்யுமாயின், அது அதன் படியே அவருக்கு அத்தகைய சரியீட்டுத் தீர்வம் அளித்தல் வேண்டும்.

(3) அத்தகைய உரிமை வழக்கு எதிலும் குறித்தவகை நிறைவேற்றத் திற்குத் தீர்ப்பாணை வழங்கப்படுதல் வேண்டும் என்றும், ஆனால், அது வழக்கில் நீதியை நிலைநிறுத்துவதற்குப் போதுமானதாகாது என்றும், ஒப்பந் தத்தின் மீறுகைக்காக வாதிக்கு ஏதாவது சரியீடு வழங்கப்படுதலும் வேண்டும் என்றும் நீதிமன்றம் முடிவு செய்யுமாயின், அது அதன்படியே அவருக்கு அத்தகைய சரியீட்டுத்தீர்வம் அளித்தல் வேண்டும்.

(4) இந்தப் பிரிவின்படி தீர்வம் அளிக்கப்பட்ட சரியீட்டுத் தொகை யைத் தீர்மானிக்கையில், நீதிமன்றம், இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872 இன்
9/1872 பிரிவு 73 இல் குறித்துரைக்கப்பட்ட நெறிமுறைகளின்படி வழிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(5) வாதி தமது வழக்குரையில் அத்தகைய சரியீட்டைக் கோரியிருந் தாலன்றி, இந்தப் பிரிவின்படி சரியீடு எதற்கும் தீர்வம் அளிக்கப்படுதல் ஆகாது :

வரம்புரையாக : வாதி வழக்குரையில் அத்தகைய சரியீடு எதையும் கோரியிராதவிடத்து, நீதிமன்றம், நடவடிக்கையின் எந்தக் கட்டத்திலும்

அத்தகைய சரியீட்டிற்கான கோரிக்கை ஒன்றைச் சேர்த்துக் கொள்வதற்காக நியாயமாக இருக்கலாகும் வரையுரைமீது வழக்குரையைத் திருத்த அவரை அனுமதித்தல் வேண்டும்.

விளக்கம்.—ஒப்பந்தம் குறித்தவகையில் நிறைவேற்றப்பட முடியாததாக ஆகியிருக்கிறது என்ற சூழ்நிலையானது, நீதிமன்றம் இந்த விதியின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரவரம்பினைச் செலுத்துவதைத் தடையுறுத்தாது.

உடைமை பெறுதல், பாகப் பிரிவினை, முன்னுறுதிப் பணம் திருப்பித் தரப்படுதல் முதலியவற்றுக்கான தீருதவியை வழங்குவதற்கு அதிகாரம்.

22. (1) உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1908 இல் அடங்கியுள்ளதற்கு மாறாக எது எவ்வாறிருப்பினும், நிலையியல் சொத்து எதையும் உரிமைமாற்றம் செய்வதற்கான ஒப்பந்தம் குறித்தவகையில் நிறைவேற்றப்படக்கோரி வழக்கிடும் ஆள் எவரும், உரிய சூழ்நிலையில்— 5/1908

(அ) அத்தகைய நிறைவேற்றத்தைக் கோருவதுடன் சொத்தின் உடைமையை அல்லது சொத்துக்கான பாகப்பிரிவினை மற்றும் தனித்த உடைமையைக் கோரலாம், அல்லது

(ஆ) குறித்தவகையில் நிறைவேற்றப்படுதலுக்கான அவரது கோரிக்கை மறுக்கப்படும் நேர்வில் அவரால் செலுத்தப்பட்ட முன்னுறுதிப் பணம் அல்லது [1][செய்யப்பட்ட] வைப்பீட்டுத் தொகை எதையும் திருப்பித் தரும்படி கோருவது உள்ளடங்கலாக அவர் பெறுவதற்கு உரிமைகொண்டவராய் இருக்கலாகும் பிற தீருதவி எதனையும் கோரலாம்.

(2) உட்பிரிவு (1) கூறு (அ) அல்லது கூறு (ஆ)-வின் படியான தீருதவி எதுவும், அது குறித்தவகையில் கோரப்பட்டிருந்தாலன்றி, நீதிமன்றத்தால் வழங்கப்படுதல் ஆகாது:

வரம்புரையாக : வாதி, வழக்குரையில் அத்தகைய தீருதவி எதையும் கோரியிராதவிடத்து, நீதிமன்றம் நடவடிக்கையின் எந்தக் கட்டத்திலும் அத்தகைய தீருதவிக்கான கோரிக்கையைச் சேர்த்துக் கொள்வதற்காக நியாயமாக இருக்கலாகும் வரையுரைகளின்மீது வழக்குரையைத் திருத்த அவரை அனுமதித்தல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1) கூறு (ஆ)-வின்படி தீருதவி வழங்குவதற்கு நீதிமன்றத்திற்குள்ள அதிகாரமானது, பிரிவு 21-ன்படி சரியீட்டுத் தீர்வம் அளிப்பதற்கு அதற்குள்ள அதன் அதிகாரங்களுக்கு ஊறின்றி இருத்தல் வேண்டும்.

இழப்பீட்டுத் தொகை குறிக்கப்பட்டிருத்தல் குறித்தவகை நிறைவேற்றத்திற்குத் தடையாகாது.

23. (1) பிறவாறு முறையானதும் குறித்தவகையில் செயலுறுத்தப்பட வேண்டியதுமான ஓர் ஒப்பந்தம், அது மீறப்படும் நேர்வில் செலுத்தப்பட வேண்டியதென அதில் ஒரு தொகை குறிக்கப்பட்டு தவறும் தரப்பினர் அத்தொகையைச் செலுத்த விரும்புவராக இருப்பினும், நீதிமன்றம், ஒப்பந்தத்தின் வரையுரைகளையும் சார்ந்திருக்கும் பிற சூழ்நிலைகளையும் கவனத்திற்கொண்டு பார்க்கையில், ஒப்பந்தம் நிறைவேற்றப்படுதலை உறுதிசெய்வதற்காக மட்டுமே தொகை குறிக்கப்பட்டிருக்கிறது, குறித்தவகையில் நிறைவேற்றப்படுதலுக்கு மாற்றாகப் பணம் செலுத்துவதற்கான தெரிவுரிமை, தவறும் தரப்பினருக்குக் கொடுப்பதற்காக அன்று எனத்தெளிவுறக் காணுமாயின், அவ்வாறு செயலுறுத்தப்படலாம்.

(2) இந்தப் பிரிவின்படி குறித்தவகையில் நிறைவேற்றத்தைச் செயலுறுத்தும்போது நீதிமன்றம், ஒப்பந்தத்தில் அவ்வாறு குறிக்கப்பட்ட தொகையையும் செலுத்துமாறு தீர்ப்பாணை வழங்குதல் ஆகாது.

---

[1] சட்டம் 52/1964, பிரிவு 3 மற்றும் இணைப்புப்பட்டியல் II ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

குறித்த வகை நிறைவேற்றத் திற்கான உரிமை தள்ளுபடி செய்த பிறகு மீறுகைக்கான சரியீடுகோரும் உரிமை வழக்குக்குத் தடை.

24. ஓர் ஒப்பந்தம் அல்லது அதன் பகுதியில் குறித்தவகை நிறைவேற்றத் திற்கான உரிமை வழக்கு தள்ளுபடி செய்யப்படுவது, அத்தகைய ஒப்பந்தத்தின் அல்லது, நேர்வுக்கேற்ப, அதன் பகுதியில் மீறுகைக்கான சரியீட்டுக்காக வழக்கிட வாதிக்குள்ள உரிமையைத் தடை செய்வதாகும், ஆனால், அத்தகைய மீறு கையின் காரணமாக, ஏந்தப் பிற தீருதவியைப் பெறுவதற்கு அவர் உரிமை கொண்ட வராயிருக்கிறாரோ அந்தப் பிற தீருதவியைப் பெறுவதற்காக வழக்கிட அவருக் குள்ள உரிமையைத் தடை செய்வதாகாது.

## தீர்வங்களைச் செயலுறுத்தலும் அறுதியாவணங்களை எழுதிக் கொடுப்பதற்கான பணிப்புரைகளும்

குறித்த சில தீர்வங் களுக்கும் அறுதி யாவணங்களை எழுதிக் கொடுப்பதற் கான உயில் வழிப் பணிப் புரை களுக்கும் முன் சென்ற பிரிவுகள் பொருந்துதல்.

10/1940 25. எந்தத் தீர்வங்களுக்கு, பொதுவர் தீர்ப்புச் சட்டம், 1940 பொருந் தாதோ அந்தத் தீர்வங்களுக்கும் ஒரு குறிப்பிட்ட அறுதியாவணத்தை எழுதிக் கொடுப்பதற்கான ஓர் உயிலின் அல்லது உயிலிணைப்பிலுள்ள பணிப்புரைகளுக்கும் ஒப்பந்தங்கள் பற்றிய இந்த அத்தியாயத்தின் வகையங்கள் பொருந்தும்.

## அத்தியாயம் III

## முறையாவணங்களைத் திருத்தியமைத்தல்

எப்போது முறையாவணம் திருத்தி யமைக்கப் படலாம்.

1/1956 26. (1) தரப்பினர்களின் மோசடி காரணமாக அல்லது அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் செய்த தவறு காரணமாக, (நிறுமங்கள் சட்டம், 1956 பொருந்துவதாயுள்ள நிறுமத்தின் செயல்முறை விதிகள் அல்லாத) எழுத்து வடிவி லான ஒப்பந்தம் அல்லது பிற முறையாவணம், அவர்களின் உண்மையான கருத்தை வெளிப்படுத்தாதபோது :—

(அ) தரப்பினர் இருவரில் எவருமோ அல்லது உரித்தமுடைய அவருடைய சார்பாற்றுநரோ முறையாவணம் திருத்தி யமைக்கப்படுவதற்காக உரிமைவழக்குத் தொடுக்கலாம் ; அல்லது

(ஆ) வாதி, முறையாவணத்திலிருந்து எழுவதாயுள்ள உரிமை எதுவும் எழுவினாவாக இருக்கிற உரிமைவழக்கு எதிலும், தமது வாதுரையில் அந்த முறையாவணம் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்று கோரலாம் ; அல்லது

(இ) எதிர்வாதி, கூறு (ஆ)-வில் சாட்டப்பட்ட உரிமைவழக்கு எதிலும், அவருக்குரிய பிற எதிர்வாதம் எதனோடும் கூட அந்த முறையா வணம் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளலாம்.

(2) ஓர் ஒப்பந்தம் அல்லது பிற முறையாவணம் உட்பிரிவு (1)இன்படி திருத்தியமைக்கப்பட வேண்டும் என்று நாடப்பட்டுள்ள உரிமைவழக்கு எதிலும், மோசடி அல்லது தவறு காரணமாக தரப்பினர்களின் உண்மையான கருத்தினை அந்த முறையாவணம் வெளிப்படுத்தவில்லை என்று நீதிமன்றம் முடிவு செய்யுமாயின், அது அந்தக் கருத்தை வெளிப்படுத்தும் வகையில், தனது உளத் தேர்வின்படி, மூன்றாமவர்கள் நல்லெண்ணத்துடனும், பெறு மானம் கொடுத்தும், ஈட்டிய உரிமைகளுக்கு ஊறின்றி, எந்த அளவுக்குக் கூடுமோ அந்த அளவுக்கு, முறையாவணத்தைத் திருத்தியமைக்குமாறு பணிக் கலாம்.

(3) முதலில் எழுத்துவடிவிலான ஓர் ஒப்பந்தம் திருத்தியமைக்கப்படலாம், அதன் பிறகு திருத்தியமைக்கக் கோரும் தரப்பினர் தமது வாதுரையில் குறித்த வகையில் நிறைவேற்றப்பட வேண்டுமென வேண்டியிருந்து நீதிமன்றமும் அது தக்கதெனக் கருதுமாயின், அந்த ஒப்பந்தம் குறித்த வகையில் செயலுறுத்தப் படலாம்.

(4) முறையாவணமொன்றைத் திருத்தியமைப்பதற்கான தீருதவி எதுவும், அது குறித்த வகையில் கோரப்பட்டிருந்தாலன்றி, இந்த பிரிவின்படி தரப்பினர் எவருக்கும் வழங்கப்படுதல் ஆகாது :

வரம்புரையாக : ஒரு தரப்பினர் தமது வாதுரையில் அத்தகைய தீருதவி எதையும் கோரியிராதவிடத்து, நீதிமன்றம், நடவடிக்கையின் எந்தக் கட்டத்திலும், அத்தகைய தீருதவிக்கான கோரிக்கையைச் சேர்த்துக் கொள்வதற்காக நியாயமாக இருக்கலாகும் வரையுரைகளின்மீது வாதுரையைத் திருத்த அவரை அனுமதித்தல் வேண்டும்.

## அத்தியாயம் IV

### ஒப்பந்தங்களை இறுத்தறவு செய்தல்

இறுத்தறவு செய்வது எப்போது நீதிமுறையில் தீர்ப்பளிக்கப் படலாம் அல்லது மறுக்கப்படலாம்.

27. (1) ஓர் ஒப்பந்தத்தில் உரித்தம் கொண்டுள்ள ஆள் எவரும், அந்த ஒப்பந்தம் இறுத்தறவு செய்யப்பட வேண்டுமென்று வழக்கிடலாம் ; மற்றும் அத்தகைய இறத்தறவுக்காகப் பின்வரும் நேர்வுகளில் எதிலும் நீதிமன்றத்தால் நீதிமுறையில் தீர்ப்பளிக்கப்படலாம், அவையாவன :—

(அ) ஒப்பந்தம் வாதியால் இல்லாநிலையதாக்கத் தக்கதாக அல்லது முடிவுறுத்தத் தக்கதாக இருக்குமிடத்து ;

(ஆ) ஒப்பந்தம் அதன் முகநிலையில் வெளிப்படையாகத் தெரியாத காரணங்களினால் சட்ட முரணானதாக இருந்து, அது அப்படி இருப்பதற்கு வாதியைவிட எதிர்வாதியே பெரிதும் காரணமாக இருக்குமிடத்து.

(2) உட்பிரிவு (1)இல் அடங்கியுள்ள எது எவ்வாறாயிருப்பினும்.—

(அ) வாதி வெளிப்படையாகவோ உட்கிடையாகவோ ஒபபந்தத்தை ஏற்றுமதி செய்திருக்குமிடத்து, அல்லது

(ஆ) ஒப்பந்தம் செய்யப்பட்ட பிறகு (எதிர்வாதியினால் செய்யப்பட்ட செயல் எதன் காரணமாகவும் இராத) சூழ்நிலைகளில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக, ஒப்பந்தம் செய்யப்பட்டபோது தரப்பினர்கள் எந்த நிலையில் இருந்தார்களோ கிட்டத்தட்ட அந்த நிலைக்கு அவர்கள் மீண்டும் கொண்டுவரப்பட முடியாதவிடத்து, அல்லது

(இ) ஒப்பந்தம் செயல் நிலையிலிருக்கும்போது, மூன்றாமவர்கள் நல்லெண்ணத்துடனும் அறிவிப்பில்லாமலும் பெறுமானம் கொடுத்தும் உரிமைகளை அடைந்துள்ளவிடத்து, அல்லது

(ஈ) ஒப்பந்தத்தின் ஒரு பகுதி மட்டுமே இறுத்தறவு செய்யப்பட நாடப்பட்டிருந்து, அத்தகைய பகுதி, ஒப்பந்தத்தின் எஞ்சிய பகுதியி லிருந்து பிரிக்கக்கூடியதாய் இல்லாதவிடத்து

நீதிமன்றம் ஒப்பந்தத்தை இறுத்தறவு செய்ய மறுக்கலாம்.

விளக்கம்.— இந்தப் பிரிவில் " ஒப்பந்தம் " என்பது, சொத்து உரிமை மாற்றச் சட்டம், 1882 அளாவியிராத ஆட்சிநிலவரைகள் தொடர்பாக, எழுத்து வடிவிலான ஒப்பந்தம் என்று பொருள்படும். 4/1882

நிலையியல் சொத்தின் விற்பனை அல்லது குத்தகைக்கான எந்த ஒப்பந்தங்கள் குறித்த வகையில் நிறை வேற்றப்படு தலுக்கான தீர்ப்பாணை வழங்கப்பட் டிருக்கிறதோ அந்த ஒப்பந்தங் களைக் குறித்த சில சூழ்நிலை களில் இறுத்தறவு செய்தல்.

28. (1) உரிமைவழக்கு எதிலும், நிலையியல் சொத்தின் விற்பனை அல்லது குத்தகைக்கான ஓர் ஒப்பந்தம் குறித்தவகையில் நிறைவேற்றப்படுதலுக்கான தீர்ப்பாணை வழங்கப்பட்டிருந்து, வாங்குநர் அல்லது குத்தகை எடுப்பவர் தீர்ப்பாணையால் அனுமதிக்கப்பட்ட காலஅளவுக்குள் அல்லது நீதிமன்றம் அனுமதிக்கலாகும் மேலுமான காலஅளவுக்குள், நீதிமன்றம் செலுத்துமாறு அவருக்கு ஆணையிட்ட கொள்விலைத் தொகையை அல்லது பிற தொகையைச் செலுத்தாதவிடத்து, விற்குநர் அல்லது குத்தகை விடுபவர் தீர்ப்பாணை வழங்கப் பட்ட அதே உரிமைவழக்கில், அந்த ஒப்பந்தம் இறுத்தறவு செய்யப்படுவதற்காக விண்ணப்பம் செய்து கொள்ளலாம் ; மற்றும் அந்த விண்ணப்பத்தின்மீது நீதிமன்றம், வழக்கில் நீதியை நிலைநிறுத்துவதற்குத் தேவைப்படலாகிறவாறு தவறும் தரப்பினர் பொறுத்தவரை மட்டுமோ முழுவதுமாகவோ அந்த ஒப்பந்தத்தை ஆணைவாயிலாக இறுத்தறவு செய்யலாம்.

(2) ஓர் ஒப்பந்தம் உட்பிரிவு (1)இன்படி இறுத்தறவு செய்யப்பட்டிருக்கு மிடத்து, நீதிமன்றம்,—

(அ) வாங்குநர் அல்லது குத்தகை எடுப்பவர் அந்த ஒப்பந்தத்தின்படி சொத்தின் உடைமையைப் பெற்றிருப்பாராயின், அவரை, அத்தகைய உடைமையை விற்குநர் அல்லது குத்தகை விடுபவரிடம் மீண்டும் ஒப்படைக்கும்படி பணித்தல் வேண்டும் ; மற்றும்

(ஆ) வாங்குநரால் அல்லது குத்தகை எடுப்பவரால் அவ்வாறு உடைமை பெறப்பட்ட தேதியிலிருந்து விற்குநர் அல்லது குத்தகை விடுபவருக்கு உடைமையை மீண்டும் ஒப்படைக்கும்வரையில் அந்தச் சொத்தினைப் பொறுத்து வந்தடைந்த குத்தகைகள், ஆதாயங்கள் அனைத்தையும், விற்குநர் அல்லது குத்தகை விடுபவருக்குச் செலுத்து மாறும், வழக்கில் நீதியை நிலைநிறுத்துவதற்குத் தேவைப்படுமாயின், வாங்குநரால் அல்லது குத்தகை எடுப்பவரால் ஒப்பந்தம் தொடர்பாக முன்னுறுதிப் பணமாக அல்லது வைப்பீடாகச் செலுத்தப்பட்ட தொகை எதனையும் திருப்பிச் செலுத்துமாறும் பணிக்கலாம்.

(3) வாங்குநர் அல்லது குத்தகை எடுப்பவர் தீர்ப்பாணையின்படி செலுத்துமாறு அவருக்கு ஆணையிடப்பட்ட கொள்விலைத் தொகையை அல்லது பிறதொகையை உட்பிரிவு (1)இல் சுட்டப்பட்ட காலஅளவுக்குள் செலுத்துவாராயின், நீதிமன்றம் அதே உரிமைவழக்கில் செய்யப்பட்ட விண்ணப்பத் தின்மீது வாங்குநருக்கு அல்லது குத்தகை எடுப்பவருக்குப் பொருத்தமான நேர்வுகளில் பின்வரும் தீருதவிகள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதுவும் உள்ளடங்கலான அவர் உரிமை கொண்டவராய் இருக்கலாகும் மேலுமான தீருதவியை வழங்கலாம், அவையாவன :—

(அ) விற்குநர் அல்லது குத்தகைவிடுபவரால் உரிய உரிமைமாற்று ஆவணம் அல்லது குத்தகை ஆவணம் எழுதிக் கொடுக்கப்படுதல்;

(ஆ) அத்தகைய உரிமைமாற்று ஆவணம் அல்லது குத்தகை ஆவணம் எழுதிக் கொடுக்கப்படுவதன்மேல், சொத்தின் உடைமையை ஒப்பு வித்தல் அல்லது சொத்துக்கான பாகப்பிரிவினையும் தனிப்பட்ட உடைமையும்.

(4) நேர்வுக்கேற்ப, ஒரு விற்குநர், வாங்குநர், குத்தகை விடுபவர் அல்லது குத்தகை எடுப்பவர் இந்தப் பிரிவின்படி கோரப்படலாகும் தீருதவி எதற்காகவும் தனிப்பட்ட உரிமைவழக்கு எதையும் தொடுத்தல் ஆகாது.

(5) இந்தப் பிரிவின்படியான நடவடிக்கைகள் எவற்றுக்குமான செலவுத் தொகைகள் நீதிமன்றத்தின் உளத்தேர்வின்படி இருத்தல் வேண்டும்.

குறித்தவகை நிறை வேற்றுகைக் கான உரிமை வழக்கில் இறுத்தறவு செய்வதற்கு மாற்றுப் படியான வேண்டுகோள்.

29. எழுத்துவடிவிலான ஓர் ஒப்பந்தம் குறித்தவகையில் நிறைவேற்றப்பட வேண்டுமென்று உரிமை வழக்குத் தொடுக்கும் ஒரு வாதி, அந்த ஒப்பந்தம் குறித்த வகையில் செயலுறுத்தப்படமுடியாததாயின், அது இறுத்தறவு செய்யப்படவும் அறவு செய்யப்படுவதற்காக ஒப்புவிக்கப்படவும் வேண்டுமென மாற்றும்படியாக வேண்டிக் கொள்ளலாம் ; மற்றும் நீதிமன்றம், அந்த ஒப்பந்தத்தைக் குறித்த வகையில் செயலுறுத்த மறுக்குமாயின், அது அந்த ஒப்பந்தம் அவ்வண்ணமே இறுத்தறவு செய்யப்படவும் ஒப்புவிக்கப்படவும் பணிக்கலாம்.

இறுத்தறவு செய்யும் தரப்பினர் களை நீதி மன்றம் நேர்மை நெறியுடன் நடந்து கொள்ளும்படி வேண்டுறுத் தலாம்.

30. ஓர் ஒப்பந்தத்தை இறுத்தறவு செய்யத் தீர்ப்பளிப்பதன்மேல், நீதிமன்றம், அத்தகைய தீருதவி வழங்கப்பட்ட தரப்பினரை, அவர் பிறதரப்பினரிட மிருந்து பெற்றிருக்கக் கூடிய நன்மை எதனையும் கூடுமான அளவில் மீண்டும் ஒப்படைக்க வேண்டும் என்றும், நீதியை நிலைநிறுத்தவதற்குத் தேவைப்படக் கூடிய சரியீடு எதையும் அவருக்குக் கொடுக்கும்படியும் வேண்டுறுத்தலாம்.

## அத்தியாயம் V

### முறையாவணங்களை அறவு செய்தல்

அறவு செய்வதற்கு எப்போது ஆணையிடப் படலாம்

31. (1) எழுத்துவடிவிலான ஒரு முறையாவணம் எந்த ஆள்பொறுத்து இல்லாநிலையதாக அல்லது தவிர்தகுநிலையதாக இருந்து, அத்தகைய முறை யாவணம் அப்படியே இருக்கும்படி விட்டு வைக்கப்படுமாயின், தமக்குக் கடுந்தீங்கு விளைவிக்கும் எனத் தகுமான அச்சம் கொண்டிருக்கிறாரோ அந்த ஆள், அது இல்லாநிலையது அல்லது தவிர்தகுநிலையது என்று தீர்ப்பளிக்கப் பெறுவதற்காக வழங்கிடலாம் ; நீதிமன்றமும் தனது உளத்தேர்வின்படி அதைப் பொறுத்து அவ்வாறே தீர்ப்பளித்து, அது ஒப்புவிக்கப்படவும் அறவு செய்யப்படவும் வேண்டு மென ஆணையிடலாம்.

(2) இந்தியப் பதிவுச் சட்டம், 1908இன்படி அந்த முறையாவணம் பதிவு செய்யப்பட்டிருக்குமாயின், எந்த அலுவலரின் அலுவலகத்தில் அந்த முறையாவணம் அவ்வாறு பதிவு செய்யப்பட்டிருக்கிறதோ அந்த அலுவலருக்கு நீதிமன்றம், தனது தீர்ப்பாணையின்படி ஒன்றை அனுப்பி வைத்தலும் வேண்டும் ; மற்றும் அந்த அலுவலர் தம் புத்தகங்களில் அடங்கியுள்ள அந்த முறையாவணத்தின் படியில் அது அறவு செய்யப்பட்டதைக் குறித்தல் வேண்டும். 16/1908

எந்த முறையாவணங்கள் பகுதியாக அறவு செய்யப்படலாம்.

32. ஒரு முறையாவணம் வெவ்வேறு உரிமைகளுக்கு அல்லது வெவ்வேறு கடமைப் பொறுப்புகளுக்குச் சான்றாகவுள்ளவிடத்து, நீதிமன்றம், உரிய நேர்வில் அந்த முறையாவணத்தில் பகுதியை அறவுசெய்து எஞ்சியுள்ளது பொறுத்து அதை இருக்கிறவாறே விட்டுவிடலாம்.

முறையாவணம் அறவு செய்யப்பட்டுள்ள போது அல்லது இல்லாநிலையது அல்லது தவிர்தகு நிலையது என்பதாக எதிர்வாதம் செய்து வெற்றி பெற்றுள்ள போது அடைந்த நன்மையை மீண்டும் ஒப்படைக்க வேண்டும் என்று அல்லது சரியீடு கொடுக்கப்பட வேண்டும் என்று வேண்டுறுத்துவதற்கான அதிகாரம்.

33. (1) ஒரு முறையாவணத்தை அறவு செய்யத் தீர்ப்பளிப்பதன்மேல், தீருதவி வழங்கப்பட்ட தரப்பினரை, பிற தரப்பினரிடமிருந்து பெற்றிருக்கலாகும் நன்மை எதையும், கூடுமான அளவில் மீண்டும் ஒப்படைக்கும்படியும், நீதியை நிலைநிறுத்துவதற்குத் தேவைப்படக்கூடிய சரியீடு எதையும் அவருக்குக் கொடுக்கும் படியும் வேண்டுறுத்தலாம்.

(2) உரிமைவழக்கு எதிலும், எதிர்வாதி,—

(அ) அந்த உரிமை வழக்கில் தமக்கு எதிராகச் செயலுறுத்துமாறு நாடப்பட்ட முறையாவணம் தவிர்தகுநிலையது என்ற அடிப்படைக் காரணத்தின்மீது, செய்த எதிர்வாதம் வெற்றிக்குரியதாகுமிடத்து, அந்த எதிர்வாதி அந்த முறையாவணத்தின்படி பிற தரப்பினரிடமிருந்து நன்மை எதையும் பெற்றிருப்பாராயின், கூடுமானவரை, அத்தகைய நன்மையை, அந்தப் பிற தரப்பினருக்கு மீண்டும் ஒப்படைக்க வேண்டுமென்று அல்லது அதற்காகச் சரியீடு கொடுக்க வேண்டுமென்று நீதிமன்றம் அவரை வேண்டுறுத்தலாம் ;

(ஆ) அந்த உரிமை வழக்கில் அவருக்கு எதிராகச் செயலுத்துமாறு நாடப்பட்ட உடன்பாடானது, இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872, பிரிவு 11 இன்படி ஒப்பந்தம் செய்து கொள்வதற்குரிய தகுதிறத்தை, அவர் கொண்டிராததால், இல்லாநிலையது என்ற அடிப்படைக் காரணத்தின்மீது செய்த எதிர்வாதம் வெற்றிக்குரியதாகுமிடத்து, நீதிமன்றம், அந்த எதிர்வாதி பிற தரப்பினரிடமிருந்து, அந்த உடன்பாட்டின்படி நன்மை எதையும் பெற்றிருப்பாராயின், அத்தகைய நன்மையை, கூடுமானவரை, அவரோ அல்லது அவரது சொத்தோ அதனால் நன்மையுற்றுள்ள அளவுக்கு, அந்தத் தரப்பினருக்கு அவர் மீண்டும் ஒப்படைக்க வேண்டுமென்று வேண்டுறுத்தலாம். 9/1872

## அத்தியாயம் VI

## விளம்புகைத் தீர்ப்பாணைகள்

சட்டமுறைத் தகுநிலை அல்லது உரிமைகள் பொறுத்து விளம்புகை செய்வதற்கு நீதிமன்றம் உளத் தேர்வு கொள்ளுதல்.

34. சட்டமுறையான நிலை எதற்கும், அல்லது சொத்து எதையும் பொறுத்த உரிமை எதற்கும் 'உரிமை கொண்ட ஆள் எவரும்' அத்தகைய நிலை அல்லது உரிமைக்கான தமது உரிமை மூலத்தை மறுக்கிற அல்லது மறுப்பதற்கு உரித்த முடைய ஆள் எவருக்கெதிராகவும் உரிமை வழக்குத் தொடுக்கலாம். அதில் நீதிமன்றமும் தனது உளத்தேர்வின்படி அவர் அவ்வாறு உரிமை கொண்டவர் என்று விளம்புகை செய்யலாம். மற்றும் அத்தகைய உரிமை வழக்கில் வாதி மேற்கொண்டு தீருதவி எதையும் கோரத் தேவையில்லை:

வரம்புரையாக : வாதி உரிமைமூலம் பற்றிய விளம்புகையோடு மட்டும் நில்லாமல் அதற்கு மேலும் தீருதவி கேட்பதற்கு உரியவராய் இருந்து, அவர் அவ்வாறு செய்யாதுவிடுமிடத்து, நீதிமன்றம் எதுவும் அத்தகைய விளம்புகை எதனையும் செய்தல் ஆகாது.

விளக்கம்.—சொத்தின் பொறுப்புக்கட்டளையர் என்பவர், எவரொருவர் உயிருடன் இல்லையோ அவருடைய உரிமைமூலத்திற்கு எதிரான உரிமை மூலத்தை மறுப்பதற்கு உரித்துமுடைய ஆள் ஆவார். அவர் உயிருடன் இருப்பாராயின், அவருக்குப் பொறுப்புக் கட்டளையராய் இருப்பவர் ஆவார்.

விளம்புகையின் விளைவு.

35. இந்த அத்தியாயத்தின்படி செய்யப்பட்ட விளம்புகையானது உரிமைவழக்கின் தரப்பினர்களையும் அவர்கள் வழிமுறையே உரிமைகோரும் ஆட்களையும், தரப்பினர்களில் எவரும் பொறுப்புக்கட்டளையர்களாக இருக்குமிடத்து, விளம்புகைத் தேதியன்று எந்த ஆட்கள் உயிருடனிருப்பார்களாயின், அத்தகைய தரப்பினர்கள் அவர்களுக்குப் பொறுப்புக்கட்டளையர்களாக இருந்திருக்கக்கூடியவர்களோ அந்த ஆட்களையும் மட்டுமே கட்டுப்படுத்தும்.

## பகுதி III

## தடுப்புத் தீருதவி

## அத்தியாயம் VII

### உறுத்துக்கட்டளைகள்—பொதுவாக

தடுப்புத் தீருதவி எவ்வாறு வழங்கப்படும்.

36. தடுப்புத் தீருதவி, நீதிமன்றத்தின் உளத்தேர்வின்படி தற்காலிக அல்லது நிலையான உறுத்துக்கட்டளை வாயிலாக வழங்கப்படும்.

தற்காலிக மற்றும் நிலையான உறுத்துக் கட்டளைகள்.

37. (1) தற்காலிக உறுத்துக் கட்டளைகள் ஒரு குறித்துரைக்கப்பட்ட காலம் வரையில் அல்லது நீதிமன்றம் மேலுமான ஆணை இடப்படும் வரையில் தொடர்ந்திருப்பனவாகும்; மற்றும் அவை உரிமைவழக்கின் எந்தக் கட்டத்திலும் வழங்கப்படலாம்; மேலும் உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1908ஆல் அவை முறைப்படுத்தப்படுவனவாகும்.

5/1908

(2) நிலையான உறுத்துக் கட்டளையானது, உரிமைவழக்கின் விசாரணையிலும், தகுதிப்பாடுகளின்மீதும் பிறப்பிக்கப்படும் தீர்ப்பாணை வாயிலாக மட்டுமே வழங்கப்படமுடியும்; அதனால் எதிர்வாதி வாதியின் உரிமைகளுக்கு முரணாக இருக்கக்கூடிய ஓர் உரிமையை வற்புறுத்துவதினின்று அல்லது ஒரு செயலைச் செய்வதினின்று நிலையாகத் தடையாணை விதிக்கப்படுகிறார்.

## அத்தியாயம் VIII

### நிலையான உறுத்துக் கட்டளைகள்

நிலையான உறுத்துக் கட்டளை எப்போது வழங்கப்படும்.

38. (1) இந்த அத்தியாயத்தில் அடங்கியுள்ள அல்லது சுட்டப்பட்டுள்ள பிற வகையங்களுக்குட்பட்டு வெளிப்படையாகவோ உட்கிடையாகவோ வாதிக்குச் சார்பாக இருந்து வருகிற கடமைப்பொறுப்பை மீறுவதைத் தடுப்பதற்காக வாதிக்கு ஒரு நிலையான உறுத்துக் கட்டளை வழங்கப்படலாம்.

(2) அத்தகைய கடமைப்பொறுப்பு எதுவும் ஒப்பந்தத்திலிருந்து எழுகிறபோது, நீதிமன்றம், அத்தியாயம் II இல் அடங்கியுள்ள விதிமுறைகளின்படியும் வகையங்களின்படியும் வழிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) சொத்தில் வாதிக்குள்ள உரிமையில் அல்லது அவரது துய்மானத்தில் (Enjoyment) எதிர்வாதி தலையிடும்போது அல்லது தலையிடப்போவதாக அச்சுறுத்தும்போது, நீதிமன்றம், பின்வரும் நேர்வுகளில் நிலையான உறுத்துக் கட்டளையை வழங்கலாம்; அவை யாவன :—

(அ) எதிர்வாதி, வாதிக்காகச் சொத்தின் பொறுப்புக்கட்டளையராக இருக்குமிடத்து ;

(ஆ) அந்தத் தலையீட்டினால் விளைந்த அல்லது பெரும்பாலும் விளையக்கூடிய உள்ளபடியான சேதத்தைக் கண்டறிவதற்கான குறியளவு எதுவும் இல்லாதவிடத்து ;

(இ) பணமாகத் தரப்படும் சரியீடு போதிய தீருதவி அளிக்க இயலாதவகையில் அந்தத் தலையீடு இருக்குமிடத்து ;

(ஈ) பல்வகை நீதிமுறை நடவடிக்கைகளை எடுப்பதைத் தடுப் பதற்கு உறுத்துக்கட்டளை தேவையாகிறவிடத்து.

செயலுறுத்துக் கட்டளைகள்.

39. ஒரு கடமைப்பொறுப்பை மீறுவதைத் தடுப்பதற்காக, நீதி மன்றம் வற்புறுத்தத்தக்கதான சில செயல்களை, நிறைவேற்றும்படி கட் டாயப்படுத்துவது தேவையாகிறபோது, நீதிமன்றம் தன் உளத்தேர்வின் படி முறையீடு செய்யப்பட்டுள்ள மீறுகை நிகழாமல் தடுப்பதற்காகவும் அதோடு செய்யத் தேவையான செயல்கள் நிறைவேற்றப்படுவதைக் கட் டாயப்படுத்துவதற்காகவும் ஒரு செயலுறுத்துக் கட்டளையை வழங்கலாம்.

உறுத்துக் கட்டளைக்கு மாற்றாக அல்லது அதற்குக் கூடுதலாக இழப்பீடு வழங்குதல்.

40. (1) பிரிவு 38இன்படி நிலையான உறுத்துக் கட்டளைக்கான அல்லது பிரிவு 39இன்படி செயலுறுத்துக் கட்டளைக்கான ஓர் உரிமை வழக்கில், வாதி அத்தகைய உறுத்துக் கட்டளையுடன் கூடுதலாக அல்லது அதற்கு மாற்றாக இழப்பீடு வழங்குமாறு கோரலாம் ; மற்றும் நீதி மன்றம், அது தக்கதெனக் கருதுமாயின், அத்தகைய இழப்பீட்டிற்கான தீர்வம் வழங்கலாம்.

(2) வாதி, தமது வழக்குரையின் இழப்பீட்டிற்கான தீருதவி கோரியிருந்தாலன்றி, இந்தப் பிரிவின்படி அத்தகைய தீருதவி எதுவும் வழங்கப்படுதல் ஆகாது :

வரம்புரையாக : அத்தகைய இழப்பீடு எதுவும் வழக்குரையில் கோரப் படாதிருக்குமிடத்து, நீதிமன்றம், நடவடிக்கையின் எந்தக் கட்டத்திலும் நியாயமாக இருக்கலாகும் வரையுரைகளின்மீது அத்தகைய கோரிக்கையைச் சேர்த்துக்கொள்வதற்காக வழக்குரையைத் திருத்துவதற்கு வாதியை அனு மதித்தல் வேண்டும்.

(3) வாதிக்குச் சார்பாக இருந்துவரும் ஒரு கடமைப்பொறுப்பு மீறப்படுவதைத் தடுப்பதற்கான உரிமைவழக்கைத் தள்ளுபடி செய்வது, அத்தகைய மீறுகைக்கான இழப்பீட்டிற்காக வழக்கிடும் அவரது உரிமை யைத் தடை செய்யும்.

**எப்போது உறுத்துக் கட்டளை மறுக்கப்படும்.**

41. (அ) உறுத்துக்கட்டளை கோரப்பட்டுள்ள உரிமைவழக்கு தொடுக்கப்படும்போது நடப்பிலிருக்கும் ஒரு நீதிமுறை நடவடிக்கையை மேற்கொண்டு நடத்துவதிலிருந்து ஆள் எவரையும் தடை செய்வது, பல்வகை நடவடிக்கைகளைத் தடுக்கத் தேவையாக இருந்தாலன்றி, அவ்வாறு தடை செய்வதற்காக,

(ஆ) உறுத்துக் கட்டளை கோரப்பட்டுள்ள நீதிமன்றத்துக்குக் கீழமைந்திராத ஒரு நீதிமன்றத்தில் நடவடிக்கை எதையும் தொடுப்பதிலிருந்து அல்லது தொடர்வதிலிருந்து ஆள் எவரையும் தடை செய்வதற்காக,

(இ) சட்டமன்றம் எதற்கும் விண்ணப்பம் செய்து கொள்வதி லிருந்து ஆள் எவரையும் தடை செய்வதற்காக,

(ஈ) குற்றவழக்கு நடவடிக்கை எதையும் தொடுப்பதிலிருந்து, அல்லது தொடர்வதிலிருந்து ஆள் எவரையும் தடை செய் வதற்காக,

(உ) எந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதைக் குறித்த வகையில் செயலுறுத்த முடியாதோ அந்த ஒப்பந்தத்தின் மீறுகையைத் தடுப்பதற்காக,

(ஊ) தொல்லையாக இருக்கும் என்று தகவாகத் தெளிவு கொள்ள முடியாதிருக்கிற ஒரு செயலைத் தொல்லை என்ற காரணத் தின்மீது தடுப்பதற்காக,

(எ) வாதி குறிப்பிசைவளித்துள்ள தொடர்ந்து இருந்துவரும் மீறுகையைத் தடுப்பதற்காக,

(ஏ) பொறுப்புரிமை அமைப்பு மீறல் பொறுத்தவரை தவிர, ஏதேனும் பிற வழக்கமான நடவடிக்கை முறையினால் சம பயனுள்ள தீருதவியை உறுதியாகப் பெற முடியும்போது,

(ஐ) வாதியின் அல்லது அவருடைய முகவர்களின் நடத்தை நீதிமன்றத்தின் உதவியைப் பெறுவதற்கு அவரை உரிமை கொண்டிராதவராக்கும் வகையில் இருக்கும்போது,

(ஒ) கோரிக்கைப் பொருட்பாட்டில் வாதிக்குத் தனிப்பட்ட அக்கறை இல்லாதபோது,

உறுத்துக்கட்டளை வழங்கப்பட முடியாது.

எதிர் மறை உடன் பாட்டை நிறைவேற்று வதற்கான உறுத்துக் கட்டளை.

42. பிரிவு 41இன் கூறு (உ)-வில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், ஓர் ஒப்பந்தமானது, ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்யாதிருப்பதாகவுள்ள வெளிப்படையான அல்லது உட்கிடையான ஓர் எதிர்மறை உடன்பாட்டுடன் இணைந்து ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்வதாகவுள்ள உறுதியளிக்கும் ஓர் உடன்பாட்டைக் கொண்டிருக்குமிடத்து, உறுதியளிக்கும் உடன்பாட்டின் குறித்தவகை நிறைவேற்றத்தை நீதிமன்றம் கட்டாயப்படுத்த இயலாதிருக்கிற சூழ்நிலையானது, எதிர்மறை உடன்பாடு நிறைவேற்றப்படுவதற்காக அது ஓர் உறுத்துக்கட்டளை வழங்குவதைத் தடையுறுத்துதல் ஆகாது :

வரம்புரையாக : வாதி அந்த ஒப்பந்தம் தம்மைக் கட்டுப்படுத்துகிற அளவுக்கு அதனை நிறைவேற்றத் தவறாதவர் ஆவார்.

1[* * *]

1. பிரிவுகள் 43, 44 ஆகியவை சட்டம், 56/1974 இன் பிரிவு 2 மற்றும் இணைப்பு பட்டியல் I ஆல் விட்டுவிடப்பட்டன.